[21st March 1964

Salary limit for free treatment in hospitals

* 356 *Q.*—Sri S. MURUGAIYAN (on behalf of Sri K. A. MATHIALAGAN) : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to raise the salary limit for free treatment in Government hospitals in Madras State from Rs. 150 to Rs. 200 in view of high cost of living at present?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அரசாங்க மருத்துவ மனைகளில் இலவச சிகிச்சைக்கு இப்போது நிச்சயிக்கப்பட்டுள்ள மாத வருமான எல்லை 100 ரூபாய் ஆகும். இதை 200 ரூபாயாக உயர்த்தும் உத்தேசமில்லை.

திரு. ம. கமலநாதன் : நமது மன்றத் துணைத் தலைவர், அவைத் தலைவர் ஆகியவர்களுக்கு இலவச சிகிச்சை விஸ்தரிக்கப்பட இருப்பது போல், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் குடும்பங்களுக்கும் இந்த முறையை விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஆம்.

Arts College for Tindivanam taluk

* 357 *Q.*—Sri G. RAJARAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to open an Arts College in Tindivanam taluk during 1964?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No.

Experimental tube wells, Paramakudi taluk

* 358 *Q.*—Sri C. SRINIVASAN : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to put up experimental tube wells in the eastern part of Paramakudi taluk in Ramanathapuram district?

The Hon. Sri P. KAKKAN : The Exploratory Tube wells Organization of Government of India have selected two sites for Exploratory Drillings in the area between Ramanathapuram and Paramakudi excluding the areas which come under Vaigai Reservoir command. There is no proposal of the State Government for sinking experimental tube wells in any area.

இந்திய அரசாங்கப் பரிசோதனைக் குழாய் கிணறுகள் நிறுவனத்தினர் ராமநாதபுரத்திற்கும் பரமக்குடிக்கும் இடையே உள்ள பகுதியில் வைகை நீர்த்தேக்க ஆயக்கட்டுப் பகுதியில் தவிர்த்து இரண்டு இடங்களை பரிசோதனைக் கிணறுகள் இறக்கத் தேர்ந்தெடுத்துள்ளனர். பரிசோதனைக் குழாய்க் கிணறுகளை இறக்க மாநில அரசாங்கத்திடம் திட்டம் எதுவுமில்லை.

9-0 க.ப.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் இப்படிப்பட்ட பரிசோதனைக் கிணறுகளைத் தோண்டும்போது எந்த அடிப் படையில் இந்த இடங்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள் ? ராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எல்லா இடங்களிலும் இப்படிப்பட்ட குழாய்க் கிணறுகளை வைக்கவேண்டும் என்பதாக மத்திய அரசாங்கத்திற்கு நம் அரசாங்கம் வற்புறுத்த முன்வருமா ? மத்திய அரசாங்கம் முன் வராவிட்டால் நம் அரசாங்கமே அந்த வேலையை மேற்கொள்ள முன் வருமா ?

21st March 1964]

கனம் திரு. பூ. கக்கன் : நம் அரசாங்கத்தைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட ஆர்கனேசேஷன் கிடையாது. மத்திய அரசாங்கம்தான் ஏற்பாடு செய்கிறார்கள். அவர்கள் அங்கங்கே பரிசோதனை செய்து பார்த்து எந்த இடத்தில் மணிக்கு 20 ஆயிரம் காலனுக்கு மேல் தண்ணீர் கிடைக்கும் என்று தெரிகிறதோ அங்கே இதை ஏற்பாடு செய்கிறார்கள்.

திரு. செ. மாதவன் : இந்தத் திட்டத்தின்கீழ் பாசன வசதி பெறுகிற நிலங்களுக்கு பாய்ச்சப்படும் நீருக்குத்தான் வரி போடுகிறார்கள். இது விவசாயிகளுக்கு மிகவும் அனுகூலமாக இருக்கிறது. இந்த அடிப்படையிலேயே பொதுக் கிணறுத் திட்டத்தின் கீழும் வரி விதிக்க நம் அரசாங்கமும் ஆலோசிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அப்படி இல்லை. இந்தத் திட்டத்தின்கீழ் ஏக்கர் ஒன்றுக்கு 123.75 ரூபாய் வரியாக வசூலிக்கப்படுகிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : எந்த அடிப்படையில் இந்தத் திட்டம் தேர்ந்தெடுக்கப்படுகிறது ? sub-soil குறைவான இடங்களை காண்பித்தால் அங்கே போதுமான தண்ணீர் கிடைக்குமா கிடைக்காதா என்பதை பரிசோதனை செய்து பார்க்க அவர்கள் முன்வருவதில்லை. ஆகவே, எந்த அடிப்படையில் நிலத்தை தேர்ந்தெடுத்து பரிசோதனை செய்கிறார்கள் ?

கனம் திரு. பூ. கக்கன் : நான் முன்பே சொன்னேன். மணிக்கு 20 ஆயிரம் காலன் கிடைக்கக்கூடிய இடமாகப் பார்த்து தேர்ந்தெடுக்கிறார்கள்.

திரு. செ. மாதவன் : நம்முடைய மாநில அரசாங்கத்திடம் பொதுக் கிணறுத் திட்டம் இருக்கிறது. இந்தக் குழாய்க் கிணறு திட்டத்தை இவர்களும் மேற்கொள்ளுவார்களா ? இதனால் விவசாயிகளுக்குச் செலவு குறையாதா ?

கனம் திரு. பூ. கக்கன் : நான் முன்பே சொன்னேன். இந்தத் திட்டம் மத்திய அரசாங்கத்தினுடையதுதான். இந்த ஆர்கனேசேஷன் நம்மிடம் இல்லை. மேலும் இதன்மூலம் செலவு ஜாஸ்தியாகத்தான் இருக்கும்.

திரு. இரா. நாராயணன் : இந்தத் திட்டத்தின் அடிப்படையில் உடையார்பாளையம் வட்டம், சன்னாசிநல்லூர் கிராமத்தில் குழாய்க் கிணறு அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தத் திட்டத்தை ராமநாதபுரம், பரமக்குடிக்கு இடையில் பரீட்சார்த்தமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : இவர்கள் எந்த அடிப்படையில் குழாய்க் கிணறு தோண்ட இடத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று நான் கேட்டேன்.

கனம் திரு. பூ. கக்கன் : A well should supply 20,000 gallons of water per hour for a period of 20 years. இதைப் பொறுத்துத்தான் செய்கிறார்கள்.

திரு. செ. மாதவன் : குழாய்க் கிணறு திட்டங்களை எந்த இடத்தில் கனிப்பொருள்கள் கிடைக்கிறது என்று சொல்கிறார்களோ அங்கேதான் மேற்கொள்ளுகிறார்கள் என்று சொல்லப்படுகிறதே. இதுபற்றி எங்கெங்கே குழாய்க் கிணறுகளை வைக்கலாம் என்பதையாவது ஆராய்ச்சி பண்ணி மத்திய அரசுக்கு சொல்ல நம் அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : நம் அரசாங்கத்திடம் அத்தகைய ஆர்கனேசேஷன் இல்லையென்று சொல்லிவிட்டேன். அவர்கள்தான் எங்கெங்கே தண்ணீர் கிடைக்கும் என்று பார்த்து முடிவு செய்ய வேண்டும்.

திண்டிவனத்தில் சப்-கோர்ட்டு

* 359 கேள்வி.—**திரு. கோ. ராஜாராம் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனத்தில் சப்-கோர்ட்டு ஒன்றைத் திறக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?